# 2024

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# Annual Report



## විජය කුමාරතුංග අනුස්මරණ රෝහල

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

## Wijaya Kumaratunga Memorial Hospital

# வருடாந்த அறிக்கை -தமிழ்
# 2024

# உள்ளடக்கம்


| பக்கம் | எண் |
|---|---|
| விஜய குமாரதுங்க நினைவு வைத்தியசாலையின் வரலாற்றுப் பின்னணி | 04-06 |
| நிறுவனத் தகவல்கள் | 07-08 |
| மாண்புமிகு சுகாதார அமைச்சருக்கு ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்கும் தலைவர் அவர்களின் கடிதம் | 09 |
| பணியாளர் அறிக்கை | 10 |
| மருத்துவமனைச் சேவைகள் பகுப்பாய்வு | 11-20 |
| 2024ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள், முக்கிய நிகழ்வுகள் மற்றும் கிடைத்த நன்கொடைகள் | 21-22 |
| 2024 டிசம்பர் 31 ஆம் தேதியன்று நிதிநிலை அறிக்கை – "நிதிசார் செயல்திறன் அறிக்கையை உட்பட நிதி அறிக்கைகள்" | 23-36 |
| 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் அறிக்கை (2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12ன் படி) | 37-45 |

| |
|---|
| **<u>நோக்கு</u>** |
| சிறந்த சுகாதார பாதுகாப்பும் மாதிரி வைத்தியசாலைக்கான முன்மாதிரியும் |
| **<u>பணி</u>** |
| பிரதேச மற்றும் நாட்டு மக்களின் சுகாதார தேவைகளை நிறைவேறுவதற்கான வசதிகள் மற்றும் பணியாளர்களை பங்களிப்புடனும் வினைத்திறனுடனும் ஈடுபடுத்தல். உடல் நோய்கள் , அறுவைசிகிச்சை நோய்கள் , கண் நோய்கள் , நீரிழிவு மற்றும் காயம் குணப்படுத்துதல் ஆகிய துறைகளில் அரசாங்க சுகாதாரத் துறையின் தரத்தை பேணுவதற்காக வைத்தியசாலையில் தற்போதுள்ள வசதிகளை தொடர்ந்து மேம்படுத்தல் |
| **<u>கூட்டு நலன்கள்</u>** |
| சிகிச்சை பெற்றுக்கொள்ளுவதற்கு வைத்தியசாலைக்கு வரும் பொது மக்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி கண் சிகிச்சை, அறுவை மற்றும் நீரிழிவு ஆகியவற்றை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்தி பயனுறுதிமிக்க சுகாதார சேவையை வழங்குவதே வைத்தியசாலையின் நோக்கமாகும். |

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் கணக்குக் கூற்றும்
# 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை

## வரலாற்றுப் பின்னணி

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையானது இலங்கை ஜயநாயக சோசலிசக் குடியரசின் 1999 நவம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1999 ஆண்டின் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞபகார்த்த வைத்தியசாலை சபை என அறிமுகப்படுத்தப்படும் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை 1988 பெப்ரவரி 16 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட விஜய குமாரதுங்க அவர்களின் ஞாபகார்த்தமாக தாபிக்கப்பட்டுள்ளது. முன்னய சனாதிபதி மேதகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களால், விஜய குமாரதுங்க அவர்கள் வசித்துவந்த ஊரான சீதூவ பிரதேச மக்களுக்கு ஒரு வைத்தியசாலையை நிர்மாணிக்கும் நோக்கத்துடன் இக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த வைத்தியசாலை, கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த கட்டுநாயக்க- சீதூவ நகர சபை எல்லையில் கொழும்பு- நீர்கொழும்பு பிரதான வீதியில் சீதூவையில் உள்ள மூன்று ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணியில் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இவ் வைத்தியயசாலை இரண்டு வாட்டுகளையும் (60 கட்டில்கள்) வெளிநோயாளர் பிரிவையும் கொண்டதாகவும் சீதூவ மக்களுக்கான ஒரு விசேட சுகாதார காப்பக அலகாகவும் இருந்தது. இவ் வைத்தியசாலை 1999 ஒக்றோபர் மாதம் 09 ஆம் திகதி திரு. விஜய குமாரதுங்க அவர்களின் பிறந்த நாளில், முன்னய ஜனாதிபதி மேதகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. வைத்தியசாலை ஒரு பணிப்பாளர் சபையினால் முகாமைத்துவப்படுத்தப்பட்டு வருவதுடன், நிதியத்துக்கு முக்கிமாக அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகின்றது. தற்போது அங்கு மருத்துவ, சத்திரசிகிச்சை மற்றும் கண் சிகிச்சைகள் உட்பட்ட வேறு மூன்றாம் நிலை சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு பெருமளவு மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுவருகின்றது.

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை பணிப்பாளர் சபை கொள்கையளவிலான தீர்மானங்களை எடுத்துவருவதுடன் அதன் செயற்பாடுகளும் அன்றாட முகாமைத்துவமும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1999 நவம்பர் 12ஆம் திகதி வெளியிடப்பட்ட 1999 ஆண்டின் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞபகார்த்த வைத்தியசாலை சபை என அறிமுகப்படுத்தப்படும் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் செயற்படுகின்றது. விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை கொள்கையளவில் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு தாபிக்கப்படாத போதிலும் கட்டணம் செலுத்தும் முறையும் பின்பற்றப்பட்டுவருகின்றது. ஆகுசெலவை நிறைவு செய்துகொள்ளும் நோக்கில் மட்டும் , சத்திரசிகிச்சை,மேலதிக பரிசோதனைகள் மற்றும் கிளினிக் ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள் தொடர்பில் கட்டணம் அறிவிடப்படுகின்ற போதிலும் வருமானம் குறைந்தவர்களிடமிருந்து இந் நிவாரண தொகையும் அறவிடப்படுவதில்லை.

88 கட்டில்களைக் கொண்ட கண் சிகிச்சை வாட்டு ஒன்றுடனான பிரிதொரு கட்டடத்தின் நிர்மாணிப்புகள் 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு தரத்தில் சிறந்த சேவையை வழங்கும் நோக்கத்துடன் தரமுயர்த்தப்பட்ட சத்திரசிகிச்சை ஆய்வு கூடத்துடன் இணைந்த பூரண வசதிகளைக் கொண்ட கண் சிகிச்சை வாட்டு ஒன்றின் நிர்மாணிப்புகள் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டினபொது மொத்த கட்டில்களின் எண்ணிக்கை 148 ஆகும்.

2012 ஆம் ஆண்டு இரண்டு மாடிக் கட்டிடத்தின் நீர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அங்கு களஞ்சியசாலை, உத்தியோகபூர்வ ஓய்வறைகள் மற்றும் போதனா மண்டபமொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERD) ஆலோசனையின் கீழ் 2015 ஆம் ஆண்டு 12.431 மில்லியன் செலவில் மூன்று மாடிக் கட்டடமொன்றின் நிர்மாணிப்புகளை பூர்த்தி செய்யும் இயலுமை கிடைத்துள்ளதுடன் அது இரசாயனகூட கட்டடம் என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது அதில் இரசாயனகூடம், மருத்துவ ஆவண அறை, உள்ளக கணக்காய்வுப் பிரிவு, மருந்து களஞ்சியசாலை மற்றும் பயன்பாட்டு அறைகள் தாபிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் சத்திரசிகிச்சை வாட்டு இரசாயனகூட கட்டடத்தின் தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது. என்டொஸ்கொபி இயந்திரமொன்று நன்கொடையாக வழங்கப்பட்ட பின் சத்திர சிகிச்சைப் பிரிவினால் வழங்கப்பட்டுவந்த சேவைகள் 2016ஆம் ஆண்டு விஸ்தரிக்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டு சத்திரசிகிச்சை வாட்டு கண் சிகிச்சை கட்டடத்திற்கு மாற்றப்பட்டதுடன் 2017 நவம்பர் மாதம் வெளி இரசாயனகூடம் புதிய இரசாயனகூட கட்டடத்தில் தாபிக்கப்பட்டது. உத்தேச வாட்டு கட்டடத்தொகுதித் கருத்திட்டத்தின் கட்டட திட்டம் 2017 ஆம் ஆண்டிறுதியின்போது பகுப்பாய்வு செய்யப்பட்டது.

உத்தேச வாட்டுத் தொகுதியின் நிர்மாணிப்புகள் தொடர்பான கொள்முதல் அலுவல்கள் 2019 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அரசாங்கத்தின் கொள்கையளவிலான தீர்மானத்திற்கமைய வாட்டு கட்டடத் தொகுதியின் நிர்மாணிப்புகள் இடை நிறுத்தப்பட்டன.

பல வருடங்களாக தேவையாக கருதப்பட்டுவந்த முக்கியமாக கருத்திட்டங்களான சத்திரசிகிச்சை நிலைய புனரமைப்புப் பணிகளும் வைத்தியர்களின் ஓய்வறைகளின் நிர்மாணிப்புகளையும் பூர்த்தி செய்யும் இயலுமை 2019 ஆண்டில் கிடைத்தது.

பிரதான கருத்திட்டங்களான, கண் சிகிச்சை கட்டடத்துடன் தொடர்புடைய கண் மற்றும் சத்திரசிகிச்சை வாட்டுகள், கண் சிகிச்சை கிளினிக் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் 2020 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2020 மற்றும் 2021 ஆண்டு ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக வைத்தியசாலைகளில் சேவைகளை முன்னெடுத்துச் செல்லுவதில் தடைகள் ஏற்பட்ட போதிலும் சுகாதார அமைச்சின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய நோயாளர்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பான சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குடும்ப சுகாதார கிளினிக் இன் புனரமைப்புப் பணிகள் 2021 ஆம் ஆண்டு ஒரு பிரதான கருத்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டன. அங்கிருந்த கதிரியக்க இயந்திரம் 21 ஆண்டுகள் பழையதாக இருந்ததுடன் அங்கு அப்போது பணிபுரிந்துவந்த

பணிப்பாளரான டாக்டர் ரோய் பெரேரா,உயிரியல் பொறியியல் பிரிவின் நன்கொடையாக ஒரு புதிய இயந்திரமொன்றைப் பெற்றுக்கொண்டார். 2021 ஆம் ஆண்டு 19.32 ரூபா மில்லியன் பெறுமதியான புதிய மைக்கிரோஸ்கொஸ் இயந்திரமொன்றை கண் சத்திரசிகிச்சைப் பிரிவிற்கு பெற்றுக்கொள்ளும் இயலுமை கிடைத்தது.

2022 ஆம் ஆண்டு குடும்ப சுகாதார கிளினிக் மருந்துகள் களஞ்சியசாலையில் தாபிக்கப்பட்டதுடன் மருந்துகள் களஞ்சியசாலை புதிய இராசாயனகூட கட்டடத் தளத்தில் தாபிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் கிளினிக் தொடர்பில் புதிய கட்டண அறவீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டில் நிலவிவந்த பொருளாதார நெருக்கடியின் கீழ் சத்திரசிகிச்சைக்கான கட்டணங்களும் திருத்தப்பட்டன. I O L சத்திர சிகிச்சைக்கான கண் வில்லைகள் வைத்தியசாலையில் வழங்கப்படாததால் அரசாங்க நிதி மீதியாக இருக்கின்றது.

TPPV மற்றும் Silicon Oil Removal என்ற அதிக செலவுகளைக் கொண்ட இரு சத்திரசிகிச்சைகளுக்கான கட்டணங்கள் வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கு அமைய அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண் கிளினிக், சத்திரசிகிச்சை கிளினிக் மற்றும் காய நிவாரண அலகு ஆகியவற்றுக்கு வரும் நோாளர்களுக்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

2024 நவம்பர் 04ஆம் திகதியன்று நோயாளிகளின் வசதிக்காகவும், நோயாளர் பராமரிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் வார்டு எண் 01 கண் மருந்து அறுவை சிகிச்சைக்கான ஒருநாள் அறுவை சிகிச்சை பிரிவாக மாற்றப்பட்டது. இதன் மூலம் கண் அறுவை சிகிச்சைகள் வேகமாகவும் வசதியாகவும் தற்போது செய்யப்படுகின்றன.

தற்போது அங்கு 4 வாட்டுகளும் 117 கட்டில்களும் உள்ளன. (2024)

| **நிறுவனத் தகவல்கள்**<br>**2024.01.01 - 2024.12.31** |
|---|
| **நிறுவனத்தின் பெயர்** |
| **விஜய குமாரதுங்க நினைவு மருத்துவமனை** |
| **முகவரி** |
| **விஜய குமாரதுங்க நினைவு மருத்துவமனை, சீதுவ** |
| **மேலாண்மை** |
| **இணைய இயக்குநர் குழுவால்** |
| **சட்டபூர்வ கட்டமைப்பு** |
| **1999 ஆண்டின் 38 இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது** |
| **கணக்காய்வாளர்கள்** |
| • **கணக்காய்வாளர் தலமை அதிபதி , தேசிய கணக்காய்வு அலுவலகம்,306 /72, பொல்தூ வீதி பத்தரமுல்ல**<br>• **உள்ளக கணக்காய்வப் பிரிவு, சுகாதார அமைச்சு, இல.26, சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10** |

| **இயக்குநர் சபை**<br>**2024.01.01 - 2024.12.31** |
|---|
| தலைவி,<br>• முன்னாள் ஜனாதிபதி மாண்புமிகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க |
| **இயக்குநர் சபை**<br>• மருத்துவர் அசேல குணவர்தன<br>பொது சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெனரல், சுகாதார அமைச்சு<br>• திரு .என்.ஏ. உமகிலிய<br>• செல்வி வை. சுமனயாபா - பொருளாளர் பிரதிநி<br>• திரு. அனந்த விமலசேன<br>• டாக்டர் சாரித் ஃபொன்சேகா, கண் அறுவை சிகிச்சை ஆலோசகர்<br>• டாக்டர் சாமர குமாரகே, கண் அறுவை சிகிச்சை ஆலோசகர் |

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி-சீதூவ

## கணக்காய்வுக் குழு

**01-01-2024 ~ 31-12-2024**

### தலைவர்

செல்வி வை.சுமனா யாப்பா, மேலதிக பணிப்பாளர் நாயகம்- தேசிய திட்டமிடல் திணைக்களம் .
திறைசேரி

### மேற்பார்வையாளர்

திருமதி ஆர்.எம்.எஸ்.வசந்தா, பிரதான உள்ளக கணக்காய்வாளர், சுகாதார அமைச்சு
திருமதி ஏ.கே.டி.இநோக்கா, தேசிய கண்காய்வு அலுவலகம், பத்தரமுல்ல

அங்கத்தவர்கள்

டாக்டர் டி.ஜீ.ஏ.ரணவீர, இயக்குனர் (பொறுப்பு நிறைவேற்றும் அதிகாரி) , விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

**சமூகமளிப்பு**

- திருமதி பீ.டி.ரீ.பீ.என்பர்னாட், கணக்காளர் ,விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை
- திர. ஆர்.ஏ.ஏ.எஸ்.கே.ரணசிங்க, நிருவாக உத்தியோகத்தர், விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

## தலைவரினால் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கும் கடிதம்

மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களே,
சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு
385, பத்தேகம விமலவன்ச நாஹிமி மாவத்தை
"சுவாசிரிபாய",
கொழும்பு 10.

**2024 ஆம் ஆண்டிற்கான விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிர்வாக சபை கணக்கு அறிக்கையும் ஆண்டறிக்கையும்**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம்இலக்க நிதிச் சட்டத்தின்பிரிவு 14 (2) இன்படி, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஆளுனர்கள் சபையின் சார்பாக, நான் 2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஆளுநர்கள் சபையின் கணக்கு அறிக்கையையும் ஆண்டறிக்கையையும் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி.
உண்மையுள்ள,

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
தலைவர்,
விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,
சீதுவ.

பிரதி: செயலாளர், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி | 2024-12-31 திகதியின்போதான பணியாட்டொகுதி |
|---|---|---|
| பணிப்பாளர் | 1 | 0 |
| மயக்க மருந்து நிபுணத்துவ வைத்தியர் | 1 | 1- தற்காலிக அடிப்படையில் |
| உடலியல் நோய் நிபுணத்துவ வைத்தியர் | 2 | 1-தற்காலிக நியமனம் |
| குடும்ப சுகாதார நிபுணத்துவ வைத்தியர் | 1 | 0 |
| சத்திரசிகிச்சை நிபுணத்துவ வைத்தியர் | 1 | 1 |
| என்டோஜனஸ் நிபுணத்துவ வைத்தியர் | 1 | 0 |
| கண் சத்திரசிகிச்சை நிபுணத்துவ வைத்தியர் | 2 | 2 |
| பிரதான மருத்துவ உத்தியோகத்தர் | 1 | 1 |
| மருத்துவ உத்தியோகத்தர் | 28 | 17 |
| பல் சத்திரசிகிச்சை வைத்தியர் | 2 | 0 |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 0 |
| கணக்காளர் | 1 | 1 |
| பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் | 2 | 2 |
| விசேட தர தாதி உத்தியோகத்தர் | 1 | 0 |
| தாதி சிஸ்டர் | 3 | 1 |
| தாதி உத்தியோகத்தர் | 85 | 77 |
| நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 |
| மருந்தாளர் | 6 | 6 |
| கதிர்வீச்சாளர் | 2 | 1 |
| மருத்துவ இரசாயனகூட தொழில்நுட்வியலாளர் | 5 | 3 |
| கண் தொழில்நுட்பவியலாளர் | 4 | 4 |
| போசனைவியலாளர் | 1 | 0 |
| பணிப் பொறுப்பாளர் | 1 | 0 |
| குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் | 1 | 0 |
| இலத்திரணியல் தொழில்நுட்பவியலாளர் | 2 | 2 |
| முகாமைத்துவ உதவியாளர் | 11 | 11 |
| மருந்துக் கலவையாளர் | 3 | 2 |
| உணவு ஆய்வாளர் | 1 | 1 |
| வீட்டுப் பொறுப்பாளர் | 1 | 0 |
| மருத்துவ ஆவண உதவியாளர் | 1 | 0 |
| வாட்டு எழுதுநர் | 1 | 0 |
| சாரதி | 5 | 5 |
| மின்சார தொழில்நுட்பவியலாளர் | 1 | 1 |
| பராமரிப்புத் தொழிலாளர் | 3 | 2 |
| ஆய்வுகூட ஓடர்லி | 2 | 2 |
| சமையலாளர் | 3 | 2 |
| தொலைபேசி இயக்குநர்/வரவேற்பாளர் | 3 | 1 |
| சுகாதார உதவியாளர் | 69 | 60 |
| **மொத்தம்** | 260 | 208 |

❖ வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியை, பிரதான மருத்துவ அதிகாரி பணி அனவல் செய்துவருவதுடன் தாதி சிஸ்டர், விசேட தர தாதியர் பதிவியில் பதில் கடமையில் இருக்கின்றார்.

# வைத்தியசாலையால் வழங்கப்படும் சேவைகள்

## அறிமுகம்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையில் வெளி நோயாளர் சிகிச்சை சேவைகள் மற்றும் உள்ளக சிகிச்சை சேவைகள் என்ற இரு சேவைகளும் வழங்கப்பட்டுவருகின்றன. வெளி நோயாளர் பிரிவு(OPD), முதலுதவி அலகு (PCU), என்டஸ்கொப்பி அலகு மற்றும் விசேட கிளினிக் ஊடாக வெளி சிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன. உடல்ரீதியான வைத்திய வாட்டுகள், சத்திரசிகிச்சை வாட்டுகள், கண் சிகிச்சைக்கான வாட்டுகள், காய வைத்திய வாட்டுகள் மற்றும் சத்திரசிகிச்சை கூடங்களின் மூலம் உள்ளக சேவைகள் வழங்கப்படுகின்றன.

2024 ஆம் ஆண்டில் வாட்டுகளில் தங்கி சிகிச்சைப் பெற்றுக்கொண்டவர்கள் 64.91% ஆகும்.

2024 ஆம் ஆண்டில் வாட்டில் சேர்ந்த மொத்த எண்ணிக்கை 15202 பேர் ஆகும்

நோயாளர் சிகிச்சைக்கான வைத்தியசாலையில் அமைந்துள்ள மருந்தகம், கதிரியக்க அலகு, வைத்திய இரசாயனகூடம், கண் நோய் பரிசோதனை பிரிவு மற்றும் ஈசீஜீ அலகு ஆகியவை நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு துணையாகவுள்ளன. வைத்தியசாலையால் பொது மக்களுக்கு விசேட மற்றும் விசேடமற்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. இவ் வைத்தியசாலை முதல்தர(ஏ) பிராந்திய வைத்தியசாலையாக 2020 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் தரப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளக முகாமைத்துவம் தேவைப்படுவதாக கருதப்படும் வைத்திய, சத்திரசிகிச்சை மற்றும் கண் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவு, முதலுதவி அலகு மற்றும் விசேட கிளினிக் என்பவற்றின் ஊடாக வாட்டுகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். MRI, CT ஸ்கேன் போன்ற விசேட பரிசோதனைகள் தேவைப்படும் நோயாளர்கள் தேசிய வைத்தியசாலை, ராகம மற்றும் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை என்பவற்றுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

2022 ஆம் ஆண்டில் வைத்தியசாலை கட்டணங்கள் அதிகரிக்கப்படல் மற்றும் கண் வில்லைகள் நோயாளரால் விலை கொடுத்து வாங்குதல் ஆகிய தீர்மானங்களால் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகள் குறைக்க முடியுமானது.

மருத்துவமனையின் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அறுவைச் சிகிச்சை செலவுகளை அபரப்பதற்காக அறுவைச் சிகிச்சைகளுக்கான கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட்டது.

### 1. வெளி நோயாளர் பிரிவு (OPD)

இவ் வைத்தியசாலையின் வெளி நோயாளர்களுள் அதிகமானவர்கள் சீதுவ கொட்டுகொட, ரந்தொலுவ, கந்தான , ஜா எல மற்றும் கட்டுநாயக்க பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். கட்டுநாயக்க ஏற்றுமதி தயாரிப்புகள் வலயத்தைச் சேர்ந்த பணியாட்டொகுதியும் அதில் அடங்கும். அத்துடன் மினுவாங்கொடை மற்றும் கம்பஹா பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்களும் வருகின்றனர்.

ஞாயிறு மற்றும் அரசாங்க லீவு நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மு.ப.8.00 முதல் பி.ப. 4 மணிவரை வெளி நோயாளர் பிரிவு இயங்கும். குறித்த லீவு நாட்களில்

மு.ப.8.00 மணி முதல் மு.ப.10.30 மணிவரை வெளி நோயாளர் பிரிவு இயங்கும். வெளி நோயாளர் பிரிவைச் சேர்ந்த நோயாளர்களுக்கு அவசியமான மருந்துகள் வைத்தியசாலையின் மருந்தகத்தால் வழங்கப்படும். வெளி நோயாளர்களுக்கான ஈசீஜீ மற்றும் கதிரியக்க வசதிகள் வைத்தியசாலையில் வழங்கப்படும்.

தேவையான சந்தர்ப்பங்களில் வெளி நோயாளர்கள் வைத்திய கிளினிக், நாளமில்லா நோய்கள் மற்றும் சுவாச நோய்கள் கிளினிக் ஆகியவற்றுக்க அனுப்பிவைக்கப்படுவார்கள். .

2024 ஆம் ஆண்டில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைப் பெற்றுக்கொண்ட

நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 109090 ஆகும்.

வெளி நோயாளர் பிரிவினால் 2756 காயக்கட்டுகள் 874 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

1 பட்டியலில் கடந்த 5 ஆண்டுகளுள் வெளிநோயாளர் பிரிவின் வருகை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

2. **<u>முதல் உதவிப் பிரிவு</u>** (PCU)

முதலுதவிப் பிரிவு இருபத்திநாமு மணித்தியாலங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஊடாக வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படும் முதலுதவிகள் தேவைப்படும் அனைவருக்கும் சிகிச்சையளிக்கப்படும். வீதி விபத்துகள், கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி உற்பத்தி வலயத்தில் ஏற்படும் தொழிற்சாலை விபத்துகள் கத்திக் குத்துக்க ஆளானவர்கள், வீட்டு விபத்துகள் ஆகிவற்றுக்கு ஆளானவர்கள் முதலுதவிப் பிரிவிற்கு கொண்டுவரப்படுவார்கள். முதலுதவிகள் கட்டாயம் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் அப் பிரிவினால் முகாமைத்துவம் செய்யப்படும். சத்திரசிகிச்சை மற்றும் கண் சம்பந்தமான விபத்துகள் தொடர்பில் தீவிர முகாமைத்துவம் தேவைப்படுவதால் அவர்கள் வைத்தியசாலையின் சம்பந்தப்பட்ட வாட்டுகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.அளிக்கப்படும் சிகிச்சைகளுக்கு மேலதிகமான விசேட சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலை, வட கொழும்பு போதனா வைத்தியசாலை மற்றும் தேசிய கண் வைத்தியசாலை ஆகிவற்றுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

2024 ஆம் ஆண்டில் முதலுதவி அலகில் சிகிச்சைப் பெற்றுக்கொண்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 19790 ஆகும்.

சம்பந்தப்பட்ட முதல் உதவி அலகின் புள்ளிவிபர தரவுகள் பட்டியல் 1 இல் காட்டப்பட்டுள்ளது.

3. **<u>பல் சிகிச்சைப் பிரிவு</u>**

பல் சிகிச்சைப் பிரிவு திங்கள் முதல் சனி வரை நோயாளர்களுக்காக திறந்துவைக்கப்படும். மூத்த பிரஜைகள் தொடர்பில் முழு வாரத்திலும், பாடசாலை மாணவர்கள் தொடர்பில் சனிக்கிழமையம் முன்னுரிமை வழங்கப்படும்.

பொதுவான பற் சிகிச்சைகள், பல் கலட்டுதல், பற்கள் சுத்தம் செய்யப்படல், சிறு வர்களுக்கான பற் சிகிச்சைகள், சிறு சத்திரசிகிச்சைகளுக்கான சிகிச்சைகள் கிளினிக்கில் செய்யப்படும்.மியுகொசில் நீக்கப்படல், பழுதடைந்த 3ஆம் மொலர்

நீக்கப்படல், விபத்துகளால் ஏற்பட்டுள்ள பற் பாதிப்புகளுக்கான சிகிச்சைகள் ஆகியவை இச் சிறு சத்திரசிகிச்சைகளில் அடங்கும்.

2024 ஆம் ஆண்டில் பற் சிகிச்சை அலகில் சிகிச்சைப் பெற்றுக்கொண்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை **5641** ஆகும்.

ஐந்து ஆண்டுகளுக்கான சம்பந்தப்பட்ட பற் சிகிச்சை அலகில் புள்ளிவிபர தரவுகள் பட்டியல் 1 இல் காட்டப்பட்டுள்ளது.

## 4. உடலியல் மருத்துவப் பிரிவு

உடல் மருத்துவப் பிரிவு ஆண் மற்றும் பெண் எனப் பிரிக்கப்பட்ட 1 வார்டையும், ஒரு மருத்துவ மனையையும் கொண்டுள்ளது. இந்த வார்டில் ஆண் நோயாளிகளுக்கு 10 படுக்கைகளும், பெண் நோயாளிகளுக்கு 10 படுக்கைகளும் உள்ளன. மருத்துவ கிளினிக் திங்கள் முதல் சனி வரை நடைபெறும். நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், சுவாச நோய் உட்பட்ட நோயாளர்களுக்கு இக் கிளினிக்கில் சிகிச்சையளிக்கப்படும்.

சனிக்கிழமை நாளமில்லா நோய்கள் பற்றிய நிபுணத்துவ வைத்தியரால் நாளமில்லா நோய்கள் கிளினிக் நடாத்தப்படும்.அது விசேட நீரிழிவு பற்றிய கிளினிக் ஆகும். அத்துடன் வயது குறைந்த (நீரிழிவு ஆரம்ப நிலை), தைரொயிட் குறைப்பாடு உட்பட்ட ஏனைய நாளமில்லா நோய்கள் தொடர்பில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் மருத்துவ கிளினிக்கில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டுள்ள நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 46667 ஆகும்.
மருத்துவ கிளினிக், வாட்டு இல.1(ஆண்கள் வாட்டு) மற்றும் 2 (பெண்கள் வாட்டு) தொடர்பான புள்ளிவிபர தரவுகள் பட்டியல் 2 இல் காட்டப்பட்டுள்ளது.

## வேறு விசேட கிளினிக்கள்

- **வேறு கிளினிக்கள் ( பரவாத நோய்கள் கிளினிக், கர்ப்பிணிகள் கிளினிக், குடும்பக் கட்டுப்பாட்டு கிளினிக்)**

பரவாத நோய்கள் ( NCD) கிளினிக், மகளிர் மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு கிளினிக் ஆகியவை வாராந்தம் தரத்தைக் கொண்ட வைத்தியர்களால் நடாத்தப்படும். குறித்த கிளினிக் கள் ஊடாக அடையாளம் காணப்படாத நோய்கள் தொடர்பில் சமூகம் விழிப்புணர்வூட்டப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. பரவாத நோய்கள், மகளிர் மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு கிளினிக் ஊடாக 2024 ஆம் அண்டு முறையே **510 ,158** மற்றும் **11** பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுளளது.
கடந்த ஐந்து ஆண்டுகளுள் நடாத்தப்பட்ட வேறு கிளினிக் கள் பற்றி புள்ளிவபர தரவுகள் பட்டியல் 3 இல் காடடப்பட்டுள்ளது.

## நடமாடும் கிளினிக் Visiting clinic

நாளமில்லா சுரப்பி நோய்கள் பற்றிய நிபுணத்துவ வைத்தியர் ஒருவர் வைத்தியசாலையில் இல்லாதபோதிலும் அது பற்றிய கிளினிக் நிபுணத்துவ வெளி வைத்தியரால் நடாத்தப்படும். நீர்கொழும்பைச் சேர்ந்த மனநோய் பற்றிய நிபுணத்துவ வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மனநோய் சிகிச்சை அலகில் பயிற்சி பெற்ற சிரேட்ட வைத்தியரால் மனநோய் பற்றிய கிளினிக் நடாத்தப்படும்.

2023.06.21 ஆம் திகதி முதல் சுவாச நோய்கள் பற்றிய புதிய கிளினிக் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 2024 ஜூலை மாதம் முதல் சிறுநீரக நோயுடன் தொடர்புடைய புதிய ஒரு கிளினிக் ஆரம்பிக்கப்பட்டது.

நாளமில்லா சுரப்பி நோய்கள்,மனநோய்கள், சுவாச நோய்கள் பற்றிய கிளினிக் யாவும் வாராந்தம் நடாத்தப்படுவதுடன் அண்மையிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் கிளினிக் களிலிருந்து அனுப்பிவைக்கப்படும் நோயாளர்களுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படும்.

2024 ஆண்டின்போது நாளமில்லா சுரப்பி நோய்கள் கிளினிக், மனநோய்கள், சுவாச நோய்கள் பற்றிய கிளினிக் தொடர்பில் நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை முறையே **11281** , **2388, 384**, **386** ஆகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான கினிளிக் பற்றிய புள்ளிவிபர தரவுகள் பட்டியல் 4 இல் காடடப்பட்டுள்ளது.

## 5. சத்திரசிகிச்சைப் பிரிவு

சத்திரசிகிச்சைப் பிரிவு 2016 ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.அப் பிரிவில் சத்திரசிகிச்சை பற்றிய நிபுணத்துவ வைத்தியர் ஒருவரும் வைத்தியர்கள் இருவரும் பணிபுரிகின்றனர். இப் பிரிவில் தற்போது 27 கட்டில்களைக் கொண்ட வாட்டு தாபிக்கப்பட்டுள்ளது. .2016 ஆம் ஆண்டிறுதிப் பகுதியில் ஒரு எண்டஸ்கொப்பி இயந்திரரம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. சத்திரசிகிச்சை தொகுதியில் சாதாரண சத்திரசிகிச்சைகள் தொடர்பில் பிரிதொரு சத்திரசிகிச்சைக் கூடம் இருப்பதுடன் அவை வாரத்தில் அதிகமான நாட்களில் சத்திரசிகிச்சை அலகுகளால பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**2024 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைப் பிரிவினால் வழங்கப்பட்ட செவைகள் பின்வருமாறு**

| விபரம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|
| கிளினிக் நோயாளர் எண்ணிக்கை | 6653 |
| சத்திர சிகிச்சைகளின் மொத்த எண்ணிக்கை | 1002 |
| பிரதான சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை | 436 |
| சிறு சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை | 287 |
| டுப்லெக்ஸ் ஸ்கேன் எண்ணிக்கை | 525 |
| Sclerotherapy பொறிமுறை | 227 |
| பீ.ஆர்.பீ. தடுப்பூசிகளை வழங்கல் | 241 |
| எம்.பீ.தடுப்பூசிகளை வழங்கல் | 68 |
| FNAC பொறிமுறை | - |
| எண்டஸ்கோப் பிரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை | 317 |
| UGIE பொறிமுறை | 62 |
| LGIE பொறிமுறை | 94 |
| கொலொனொஸ்கொபி எண்ணிக்கை | 27 |
| Proctoscopy பொறிமுறை மற்றும் Sclerotherapy தடுப்பூசிகளின் எண்ணிக்கை | 49 |
| பயொப்சி - UGIE மற்றும் LGIE | 40 |
| Endovenous Radiofrequency Ablation (EVRFA) | 279 |

**காயங்கள்**
**நலநோம்புகை கிளினிக் மற்றும் வாட்டு**

நிபுணத்துவ வைத்தியரின் ஆலோசனைகளின் கீழ் நிருவகிக்கப்படும் இப் பிரிவு 14 கட்டில்களைக் கொண்ட ஒரு வாட்டு மற்றும் ஒரு கிளினிக் கைக் கொண்டதாகும். நாட்டில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் இக் கிளினிக் கிற்கு வருவதுடன் காலங்கடந்த காயங்களுக்கு வாட்டு மற்றும் கிளினிக் ஆகியவற்றின் மூலம் சிகிச்சையளிக்கப்படும். காய நிவாரணம் மற்றும் சத்திரசிகிச்சைப் பிரிவிற்கு வருடாந்தம் அதிகளவில் செலவிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் காய நிவாரணம் கிளினிக் இற்கு வந்த நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை **7013** ஆகும்.

கடந்த ஐந்தாண்டுகளுள் குறித்த விடயம் பற்றிய புள்ளிவிபரத் தரவுகள் பட்டியல் பின்வருமாறு.

## 6. கண் பிரிவு

நிபுணத்துவ கண் சத்திரசிகிச்சை வைத்தியர்கள் இருவரும் 5 மருத்துவ உத்தியோகத்தர்களும் இப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ் அலகில் கண் சிகிசசை கிளினிக், 40 கட்டில்களைக் கொண்ட கண் சிகிச்சை வாட்டு, கண் சத்திரசிகிச்சை நிலையம் ஆகியவை அடங்குவதுடன் அவற்றின் மூலம் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

- கண் சத்திரை சிகிச்சைகள்
- கண் கிளினிக்கள்
- 24 மணித்தியாலமும் யெற்படும் விபத்து முகாமைத்துவ சேவைகள்
- கண் பரிசோதனைகள்
- இலத்திரணியல் சிகிச்சைகள்

கண் சிகிச்சைப் பிரிவினால் அயல் பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்களுக்கும் நாட்டில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும்

- **<u>கண் சத்திரை சிகிச்சைகள்</u>**

கண்ணில் விழ்த்திரைப் பாதிப்பை நீக்கும் சத்திரசிகிச்சை முக்கியமாக அங்கு செய்யப்படுவதுடன் பின்வரும் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படும்.

2024 ஆண்டில் 10588 முக்கிமான கண் சத்திரசிகிச்சைகளும் 645 சிறு சத்திரசிகிச்சைகளும் செய்யப்பட்டுள்துடன் மொத்தம் 11233 கண் சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

- **<u>கண் கிளினிக்கள்</u>**

நாட்டில் பல பிரதேசங்களைச் சேர்ந்த கண் சார்ந்த நோயாளிகள் இக் கிளினிக் இற்கு வருவதுண்டு. medical retina, surgical retina, uveitis, variety of corneal diseases, strabismus, ocular tumours , oculoplasty and neuro-ophthalmic cases ஆகிய பிரச்சினைக் கொண்ட நோயாளர்களுக்கு அங்கு சிகிச்சையளிக்கப்படும். கண் சார்ந்த விபத்துகளுக்கு தினந்தோறும் சிகிச்சையளிக்கப்படும்

சாதாரண கண் கிளினிக் உடன் கண் நீரிழிவு, குழுகோமா, சிறுவர் கண் நோய்கள் கிளினிக் வகைகள் நடாத்தப்படும். அவற்றில் முறையே 197, 233 மற்றும் 1099 எண்ணிக்கையான நோயாளர்கள் கலந்துகொண்டுள்ளார்கள் .

2024 ஆண்டில் 45241 சாதாரண கண் நோயளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. கண் கிளினிக் இற்கு வந்த மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 46770 ஆகும்.

- **<u>24 நாளு மணித்தியாலமும் செயற்படும் விபத்து முகாமைத்துவச் சேவை</u>**

2024 ஆம் ஆண்டில் சிகிச்சையளிக்கப்பட்ட, நாளாந்த கிளினிக் நேரத்திற்குப் பின்னர் கண் வாட்டுக்கு வந்த கண் சார்ந்த விபத்துகள் மற்றும் அவசர சிகிச்சைக்கான நோயாளர்களின் எண்ணிக்கை 8847 ஆகும்.

- ## கண் பரிசோதனைகள்

குறித்த அலகு பல்வேறு கண் பரிசோதனைகளுக்கான வசதிகளைக் கொண்டது..

I. கண் பார்வை பரிசோதனைகள் - Spectral domain OCT machine, B scanner, FFA
II. குழுகோமா பரிசோதனைகள் -, OCT- RNFL
III. Biometry பரிசோதனைகள் - A and B ultrasound scanner, IOL master

2024 ஆம் ஆண்டில் OCT பரிசோதகைள் 3100, Biometry பரிசோதகைள் 11050 கண் பிரிவில் செய்யப்பட்டுள்ளன.

## ஒரே நாளில் கண்புரை அறுவை சிகிச்சை பிரிவு

நோயாளிகளுக்கு அதிக வசதி மற்றும் திறமையான சேவையை வழங்குவதற்காக, 2024 நவம்பர் 04ஆம் திகதியில் இருந்து வார்டு எண் 01 கண் ஒளிபுகா நோயிற்கான ஒருநாள் அறுவைச் சிகிச்சை பிரிவாக நிறுவப்பட்டது. 2024 நவம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையிலான காலத்தில் 1591 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

- ## லேசர் சிகிச்சை

லேசர் தொழில்நுட்ப பாவனையில் நீரிழிவினால் விழித்தரை முகாமைத்துவம் அதிகளவில் செய்யப்பட்டுள்ளன. கண் பார்வையில் நரம்புக் கோலாறுகள், கண் பார்வையில் விழித்திரைக் கோலாறுகள் ஆகியவை நீக்கப்பட்டள்ளன.

21 PRP லேசர் , 15 FLT லேசர், 311 YAG CAP லேசர், 14 Barrier லேசர் உட்பட்ட வேறு 01 லேசர்கள் செய்யப்பட்டுள்ளன.
2024 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மொத்த லேசர் சிகிச்சைகளின் எண்ணிக்கை 362 ஆகும்.

# உதவிச் சேவைகள்

## 7. மருத்துவ இரசாயனகூடம்

மருத்துவ இரசாயனகூடம் நவீன உபகரணங்களைக் கெண்டுள்ளதுடன் இரத் மாதிரிகளைப் பெற்றுக்கெள்ளுவதனை முறைமைப்டுத்துவத்கு பிரிதொரு மாதிரிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவ இரசாயன கூடத்திற்கு மூன்று மருத்துவகூட இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். திங்கள் முதல் சனி வரையிலும் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமையும் இரசாயனகூடம் இயங்கிவருகின்றது.

2024 ஆண்டில் நடாத்தப்பட்ட இரசாயனகூட பரிசோதனைகளின் முழு எண்ணிக்கை 53507 ஆகும் .

## 8. ஈ.சீ.ஜீ.பிரிவு

ஈசீஜீ துறைசார்ந்த இரண்டு தொழில்நுட்பவியலாளர்கள் இயக்கப்படும் ஈசீஜீ (ECG) அலகின் ஊடாக வெளி மற்றும் வதிவிட நோயாளர்களுக்கு சேவைகள் வழங்கப்படும் .யர்னால் செயற்படுத்தப்பட் இப் பிரிவு மூடப்பட்டுள்ளபோது நோயாளர்களுக்கு

தேவைப்படும் தேவைப்படும் ஈசீஜீ ஆரம்ப நிலை நிவாரணங்கள் மூலம் வழங்கப்படும் 2024 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஈசீஜீ களின் மொத்த எண்ணிக்கை 5184 ஆகும்.

## <u>கதிரியக்கப் பிரிவு</u>

ஒரு கதிரியக்க தொழில்நுட்பவியலாளரைக் கொண்ட கதிரியக்கப் பிரிவு உடல் ரீதியான சகல கதிரிக்க படங்களையும் பெற்றுக்கொள்ளுவதற்கான வசதிகளைக் கொண்டதாகும். நவீன CR இயந்திரம் தாபிக்கப்பட்ட பின் பாதிப்புடைய இரசாயனப் பொருட்களின் வெளியேறல் கட்டுப்படுத்தப்பட:டுள்ளது.

**2024** ஆண்டில் பெறப்பட்டுள்ள கதிரியக்கப் படங்களின் எண்ணிக்கை **3904** ஆகும்.

கடந்த ஐந்தாண்டுகளுள் உதவிச் சேவைகள் பற்றிய புள்ளிவிபரத் தரவுகள் பட்டியல் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## <u>நோயாளர்களுக்கான சேவைகள் பற்றிய புள்ளிவிபர சுருக்கம்</u>

1 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| வெளி நோயாளர் பிரிவு | 71,212 | 47,514 | 82,565 | 113,317 | 109090 |
| வெளி சிகிச்சைப் பிரிவு - தடுப்பூசி | 1,102 | 1,126 | 1,072 | 871 | 874 |
| வெளி சிகிச்சைப் பிரிவு - காயக்கட்டு | 8,703 | 6,395 | 5,312 | 2,824 | 2756 |
| முதலுதவிப் பிரிவு | 15,134 | 11,256 | 15,438 | 18,196 | 19790 |
| பற்சிகிச்சைப் கிளினிக் | 4,757 | 3,671 | 4,610 | 4,032 | 5641 |

<u>உடல் மருத்துவப் பிரிவு</u>

2 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | கலந்துகொண்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| மருத்துவ கிளினிக் | 34,012 | 30,212 | 36,160 | 45,777 | 46,667 |

| பிரிவு | வாட்டு நோயாளர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| மருத்துவ வாட்டு இல. 1-ஆண் | 731 | 619 | 749 | 757 | 568(அக்டோபர் மாதம் வரை)) |
| மருத்துவ வாட்டு இல.1-பெண் | 1,046 | 851 | 1,009 | 1216 | 1089 |

## வேறு விசேட கிளினிக்கள்

3 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | கிளினிக்களில் கலந்துகொண்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| குடும்ப சுகாதார பிகிளினிக் | 6,929 | 5,275 | 6,013 | - | - |
| பரவாத நோய்கள் கிளினிக் | 279 | 426 | 555 | 770 | 510 |
| பெண்கள் கிளினிக் | 15 | 439 | 687 | 209 | 158 |
| குடும்பக் கட்டுப்பாட்டு கிளினிக் | | 16 | 54 | 24 | 11 |

## நடமாடும் கிளினிக்கள்

4 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | கிளினிக்களில் கலந்துகொண்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த கிளினிக் | 5,413 | 2,960 | - | - | - |
| சிறுவர் நோய்கள் கிளினிக் | 182 | - | - | - | - |
| மனநோய் கிளினிக் | 1,895 | 1,601 | 1,898 | 2299 | 2,388 |
| தொண்டை, காது மற்றும் மூக்கு கிளினிக் | 135 | - | - | - | - |
| எண்டோகிரைனாலஜி கிளினிக் | | 1,659 | 7,659 | 8409 | 11,281 |

## சத்திரசிகிச்சைப் பிரிவு

5 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| சத்திரசிகிச்சைப் கிளினிக் | 3,261 | 4,829 | 6,545 | 6783 | 6,653 |
| எண்டஸ்கொப்பி பரிசோதனைகள் | 748 | 566 | 430 | 432 | 317 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண சிகிச்சைகள் | 675 | 767 | 903 | 1062 | 1,012 |
| வாட்டு இல.6 (ஆண்/பெண்) | 2,544 | 2,284 | 2,496 | 2731 | 2,733 |
| காய சிகிச்சைப் பிரிவு | 11,179 | 9,316 | 11,035 | 5679 | 7,013 |
| வாட்டு இல.5 காய நிவாரண வாட்டு (ஆண்/பெண்) | 119 | 119 | 176 | 330 | 387 |

கண் பிரிவு

6 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| கண் கிளினிக் | 30,078 | 27,603 | 31,893 | 44549 | 46,770 |
| கண் சத்திரசிகிச்சை | 3,724 | 5,521 | 5,823 | 9927 | 11,283 |
| வாட்டு இல.3- (ஆண்/பெண்) | 4,410 | 5,679 | 5,941 | 10363 | 10,425 |
| இலத்திரனியல் சிகிச்சைகள் | 723 | 1,072 | 873 | 867 | 363 |
| Refractive பரிசோதனைகள் | 5,602 | 5,549 | 9,638 | 9484 | 11,050 |
| DCSU | - | - | - | - | 1591 |

உதவிச் சேவைகள்

7 ஆம் இலக்க பட்டியல்

| பிரிவு | நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| ஆய்வுகூட பரிசோதனைகள் | 69,697 | 53,177 | 55,696 | 55129 | 53,507 |
| கதிர்வீச்சு பரிசோதனைகள் | 1,929 | 1,816 | 1,963 | 1518 | 3,904 |
| ஈசீஜீ பரிசோதனைகள் | 5,409 | 3,869 | 4,045 | 4297 | 5,184 |

## 2024 ஆண்டில் அடைந்துள்ள இலக்குகள்

1) **<u>மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்</u>**

2) <u>பிரதான மருத்துவ உபகரணங்கள் -</u> <u>ரூபா. மில்லியன்</u>

| | |
|---|---|
| Laparoscopy Monitor | 3.73 |

3) **<u>தளபாடங்கள் மற்றும் பொறுத்துதல்,இயந்திரசாதனங்கள் மற்றும் கணனி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்</u>**

| | **<u>ரூபா மில்லியன்</u>** |
|---|---|
| கணனி உபகரணங்கள்- பட்டியலுக்க அமைய | 0.20 |
| தளபாடங்கள் ( மேசை, கதிரை, அலுமாரி ) | 0.11 |
| இயந்திரசாதனங்கள் | 0.62 |

## 2024 ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- இரத்த தான நிகழ்ச்சி 2024 பெப்ரவரி 16 ஆம் திகதி நடைபெற்றது
- இளம் தலைமுறை நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி 2024 பெப்ரவரி 17 ஆம் திகதி நடைபெற்றது.
- சுகாதாரக் கல்விப் பிரிவு 2024 பெப்ரவரி 19 ஆம் திகதி மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இரத்த சர்க்கரை பரிசோதனையை நடத்தியது.
- 2024 மார்ச் 19 அன்று நடைபெற்ற தொற்றுநோய் கட்டுப்பாட்டு அறிவை புதுப்பிக்கும் சொற்பொழிவுகள் தொடரின் முதல் சொற்பொழிவு
- சிறுநீரக நோய்களில் நிபுணரான டாக்டர் உதான ரத்னபால அவர்களால் 2024 ஏப்ரல் 7 அன்று நடத்தப்பட்ட காலோசிதமான சொற்பொழிவுத் தொடரில்
- உலக சுவாச நோய் தினம் 2024 மே 09 அன்று நடத்தப்பட்டது
- 2024.06.02 ஆம் திகதி வேயங்கொடை பகுதியில் வாழும் வசதியற்ற மக்களுக்கு கண் சிகிச்சை முகாம் அங்கு நடத்தப்பட்டது
- மருத்துவமனையின் தலைவர் கௌரவ சந்திரிகா பண்டாரநாயக்க அவர்களால், ஊழியர்களுடன் அவர்களின் பணிப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அக்டோபர் 3, 2024 அன்று இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.
- மருத்துவமனையின் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், அக்டோபர் 12, 2024 அன்று இரவு முழுவதும் பிரித் பிரசங்கம் நடைபெற்றது.
- மருத்துவமனையின் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், அக்டோபர் 13, 2024 அன்று அன்னதானம் வழங்கப்பட்டது.
- நவம்பர் 30, 2024 அன்று நீரிழிவு தின நிகழ்ச்சி நடைபெற்றது.
- டிசம்பர் 10, 2024 அன்று மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

## நன்கொடைகள்

- 2024.07.05 அன்று ATG நிறுவனத்தினால் ரூ.12.8 மில்லியன் பெறுமதியுள்ள Green Laser Machine ஒன்று வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.
- இயக்குநர் திரு. நீல் உமாகிலிய ரூ.2,619,851.50 மதிப்பிலான தொகையை அறுவைசாலை டைலிங் திட்டத்திற்கு தானமாக வழங்கினார்.
- 2024 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ரூ.2,555,931.99 மதிப்பிலான தொகையை அறுவைசாலை தொடர்பான திட்டமான **Theater Door Replacement** க்காக கீழ்வரும் நிறுவனங்கள் தானமாக வழங்கின:

    - ♣ Emerchemie NB (Ceylon) LTD - ரூ.1,000,000.00
    - ♣ George Steuart Health Pvt Ltd - ரூ.350,000.00
    - ♣ Lenstech Innovation Pvt Ltd - ரூ.500,000.00
    - ♣ Dial Textile Industries Pvt Ltd - ரூ.500,000.00
    - ♣ Hemas Pharmaceuticals (Pvt) Ltd - ரூ.1,000,000.00

- ஜூலை 2024 இல், குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு லென்ஸ்கள் வழங்குவதற்காக திரு. அஜித் டயஸ் ரூ. 250,000/- நன்கொடை அளித்தார்

- Rotary Club of Colombo Metropolitan நிறுவனம் கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்காக ரூ.1,276,760.00 தானமாக வழங்கியது:
    - ♣ Retina Scopes - 03
    - ♣ Pulse Oximeter
    - ♣ Digital BP Meter
    - ♣ Fingertip Pulse Oximeter

- திரு. நீல் உமாகிலிய , திரு எச்.எச்.பி. அமரசேன, மற்றும் மேலும் சிலர் இணைந்து 2024 ஆண்டிற்காக வைத்தியசாலைக்காக ரூ.35,000.00 தானமாக வழங்கினார்கள்.

# நிதி அறிக்கைகள்
## 31/12/2024 அன்று நிறைவடைந்த ஆண்டுக்கான

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ

## நிதி செயல்திறன் அறிக்கை

**2024 டிசம்பர் 31 ஆம் தேதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | | 2024 | 2023 (மீண்டும் கூறப்பட்டது) |
|---|---|---|---|
| **வருமானம்** | | Rs | Rs |
| அரசுத் தொண்டு (மறுமொழி செலவாக)) | | 456,800,000.00 | 403,200,000.00 |
| மூலதன உதவித்தொகையின் கழிவூதியம் | | 23,213,279.24 | 22,483,420.64 |
| நன்கொடைகளைத் திரும்பப் பெறுதல் | | 4,697,257.42 | 5,364,357.56 |
| பிற வருவாய் | 15 | 127,335,336.29 | 110,784,767.60 |
| **மொத்த வருவாய்** | | 612,045,872.95 | 541,832,545.80 |
| | | | |
| **செலவுகள்** | | | |
| ஊதியங்கள் சம்பளம் மற்றும் பணியாளர் சலுகைகள் | 16 | 317,918,824.63 | 257,199,616.53 |
| பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் | 19 | 203,344,059.45 | 179,641,776.80 |
| தேய்மானம் | 17 | 27,910,536.66 | 27,847,778.20 |
| தேய்மானம் மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் | | 10,290,000.00 | 2,250,000.00 |
| மற்ற செலவுகள் | 18 | 99,537,746.55 | 86,480,546.68 |
| | | | |
| **மொத்த செலவுகள்** | | 659,001,167.29 | 553,419,718.21 |
| | | | |
| **காலப்பகுதிக்கான மீதி / (பற்றாக்குறை)** | | **(46,955,294.34)** | **(11,587,172.41)** |

**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ**

**நிதி நிலை அறிக்கை**

**2024 டிசம்பர் 31 ஆம் தேதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | | 2024 | 2023 (மீண்டும் கூறப்பட்டது ) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | Rs | Rs |
| **தற்போதைய சொத்துக்கள்** | | | |
| பணமும் அதனுடன் ஒத்த சொத்துகளும் | 1 | 3,746,003.08 | 6,619,238.71 |
| பெறத்தக்கவைகள் | 2 | 18,562,652.08 | 16,886,586.01 |
| சரக்குகள் | 3 | 43,455,277.18 | 42,766,376.07 |
| முன்கூட்டியே செலுத்துதல் | 4 | 740,179.50 | 363,999.64 |
| | | 66,504,111.84 | 66,636,200.43 |
| மூலதன வேலை முன்னேற்றம் | 5 | 31,643,712.74 | 31,643,712.74 |
| **நடப்பு அல்லாத சொத்துக்கள்** | | | |
| உள்கட்டமைப்பு, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் (WDV) | 6 | 101,587,107.51 | 93,397,764.43 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் (WDV) | 7 | 187,380,615.26 | 186,525,390.79 |
| | | 288,967,722.77 | 279,923,155.22 |
| **மொத்த சொத்துக்கள்** | | 387,115,547.35 | 378,203,068.39 |
| **பொறுப்புகள்** | | | |
| **தற்போதைய பொறுப்புகள்** | | | |
| செலுத்த வேண்டியவை | 8 | 14,017,238.14 | 13,614,869.10 |
| கடன் கொடுத்தவர்கள் | 9 | 199,334,096.53 | 169,815,329.37 |
| | | 213,351,334.67 | 183,430,198.47 |
| **நடப்பல்லாத கடன்கள்** | | | |
| ஊதிய நன்றி தொகைக்கான ஒதுக்கீடு | 10 | 60,340,465.62 | 53,728,397.07 |
| **மொத்த பொறுப்புகள்** | | 273,691,800.29 | 237,158,595.54 |
| **நிகர சொத்துக்கள்** | | **113,423,747.06** | **141,044,472.85** |
| **நிகர சொத்துக்கள் / பங்குகள்** | | | |
| மூலதனம் | 11 | 75,787,890.44 | 75,787,890.44 |
| அரசு மானியம் - மூலதனம் | 12 | 154,174,161.26 | 167,665,562.84 |
| நன்கொடை | 13 | 28,494,198.36 | 13,368,228.23 |
| இருப்புக்கள் - மூலதன ஆதாயம் | | 2,131,366.30 | 2,131,366.30 |
| மறுமதிப்பீட்டு இருப்பு | | 40,200,000.00 | 22,500,000.00 |
| திரட்டப்பட்ட உபரிகள்/(பற்றாக்குறைகள்) | 14 | (187,363,869.30) | (140,408,574.96) |
| மொத்த நிகர சொத்துக்கள் / பங்கு | | **113,423,747.06** | **141,044,472.85** |

| | | | |
|---|---|---|---|
| மறுமதிப்பீட்டு இருப்பு | | 40,200,000.00 | 22,500,000.00 |
| திரட்டப்பட்ட உபரிகள்/(பற்றாக்குறைகள்) | 14 | (187,363,869.30) | (140,408,574.96) |
| மொத்த நிகர சொத்துக்கள் / பங்கு | | 113,423,747.06 | 141,044,472.85 |

இத்த நிதி அறிக்கைகள் தயாரிப்புக்கும் வழங்குதலுக்கும் இயக்குனர் குழு பொறுப்பேற்கின்றது. இத்த நிதி அறிக்கைகள் இயக்குனர் குழுவினால் ஒப்புதல் பெற்றுள்ளன மற்றும் அவர்களின் சார்பாக கையெழுத்திடப்பட்டுள்ளன.

சந்திரிகா குமாரதுங்க

தலைவர்

இயக்குநர் குழு

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

CHAIRPERSON
WIJAYA KUMARATHUNGA MEMORIAL HOSPITAL
SEEDUWA.

திகதி : 18/02/2025

என்.ஏ. உமகிலிய

இயக்குநர்

இயக்குநர் குழு

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

திகதி : 18/02/2025

DIRECTOR BOARD
WIJAYA KUMARAT UNGA . MEMORIAL HOSPITAL
SEEDUWA.

டாக்டர். டி.ஜி.ஏ. ரணவீர

இயக்குநர் (கவர்அப்)

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

திகதி : 18/02/2025

Director (Duty Cover up)
Wijaya Kumaratunga Memorial Hospital
Seeduwa.

பீ.டீ.டீ.பீ.என்.பர்னாட்

கணக்காளர்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

திகதி : 17/02/2025

Accountant
Wijaya Kumara... Hospital
Seeduwa

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கான பணவினை அறிக்கை

| | |
|---|---|
| | Rs |
| **செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பணவினைகள்** | |
| உபரி/(பற்றாக்குறை) | (46,955,294.34) |
| **பணமில்லா இயக்கங்கள்** | |
| தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டில் அதிகரிப்பு / (குறைப்பு) | 38,200,536.66 |
| தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டில் அதிகரிப்பு / (குறைப்பு) (ஒட்டுமொத்தப் பங்கு) | |
| பணமதிப்பிழப்பு | (27,910,536.66) |
| செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு / (குறைப்பு) | 402,369.04 |
| கடன் வழங்குநர்களில் அதிகரிப்பு / (குறைவு) | 29,518,767.16 |
| சரக்கு (அதிகரிப்பு) / குறைவு | (688,901.11) |
| பணியாளர் செலவு தொடர்பான ஏற்பாடுகளில் அதிகரிப்பு / (குறைப்பு) | 6,612,068.55 |
| முன்கூட்டிய கட்டணங்களில் (அதிகரிப்பு) / குறைவு | (376,179.86) |
| பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | (1,676,066.07) |
| மறுமதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களின் நிகர மதிப்பு (செலவுகளுக்கு வசூலிக்கப்படுகிறது ) | 1.00 |
| செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவினைகள் | (2,873,235.63) |
| | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து வரும் பணப்புழக்கங்கள்** | |
| ஆலை மற்றும் உபகரணங்களை வாங்குதல் | (9,721,877.66) |
| மூலதனப் பணிகள் முன்னேற்றத்தில் அதிகரிப்பு | - |
| பெற்றுள்ள மூலதன நிதியுதவி | 9,721,877.66 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர பணப்புழக்கங்கள் | (0.00) |
| | |
| **நிதி மேலாண்மை நடவடிக்கைகளிலிருந்து பணவினைகள்** | |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து நிகர பணப்புழக்கங்கள் | |
| பணம் மற்றும் பணம் போன்ற சொத்துகளில் நிகர அதிகரிப்பு / (குறைவு) | (2,873,235.63) |
| காலத்தின் தொடக்கத்தில் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவை | 6,619,238.71 |
| காலத்தினுடைய இறுதியில் பணமும் பணத்துக்குத் தகுதியான சொத்துகளும் | 3,746,003.08 |
| | |
| **பணப்புழக்க அறிக்கைக்கான குறிப்புகள்** | |
| பணம் மற்றும் பணத்துக்கு இணையான சொத்துகள் | |
| வங்கியில் பணம் | 2,221,411.07 |
| வங்கியில் பணம் - நன்கொடை கணக்கு | 858,272.01 |
| கையில் காசு | 666,320.00 |
| | 3,746,003.08 |

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ

### நிகர சொத்துக்கள் / பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை

2024 டிசம்பர் 31 ஆம் தேதி முடிவடைந்த ஆண்டுக்கான (அனைத்தும் இலங்கை ரூபாயில் )

| | அரசாங்க மானிய மூலதனம் | பிற நிறுவனங்களிலிருந்து நன்கொடைகள் | WKMH அறக்கட்டளை | BOI | UDA | மூலதன ஆதாய மீதிப்பணம் | மறுசீரமைப்பு இருப்பு | நிகர உபரி / (பற்றாக்குறை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/01/2024-ம் தேதியுள்ள நிலுவை | 167,665,562.84 | 13,368,228.23 | 29,632,139.32 | 28,155,751.12 | 18,000,000.00 | 2,131,366.30 | 22,500,000.00 | (140,408,574.96) | 141,044,472.85 |
| | | | | | | | 17,700,000.00 | | 17,700,000.00 |
| வருடத்தில் PPE மறுமதிப்பீடுகள் | - | - | - | - | - | - | | - | - |
| | | | | | | | | | - |
| ஆண்டு முழுவதும் பெறப்பட்ட மூல | 9,721,877.66 | 19,823,227.55 | - | - | - | - | - | - | 29,545,105.21 |
| | | | | | | | | | - |
| மூலதன மானிய ஒதுக்கீடு | (23,213,279.24) | (4,697,257.42) | - | - | - | - | - | - | (27,910,536.66) |
| | | | | | | | | | - |
| ஆண்டுக்கான நிகர உபரி / (பற்றாக்கு | - | - | - | - | - | - | - | (46,955,294.34) | (46,955,294.34) |
| | | | | | | | | | - |
| வருடத்தில் செய்யப்பட்ட சரிசெய்தல்கள் | | - | - | - | - | - | - | - | - |
| | | | | | | | | | - |
| 31/12/2024 நிலவரப்படி இருப்பு | **154,174,161.26** | **28,494,198.36** | **29,632,139.32** | **28,155,751.12** | **18,000,000.00** | **2,131,366.30** | **40,200,000.00** | **(187,363,869.30)** | **113,423,747.06** |

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ

**2024 டிசம்பர் 31-ம் தேதியுள்ள நிலுவையில் நிலையான சொத்துகள் அட்டவணை** (அனைத்தும் இலங்கை ரூபாயில் )

(Rs)

| பொருட்கள் | 01-01-2024 நிலவரப்படி செலவு | வருடத்தின் போது வசூலிக்கப்பட்ட தொகைகள் | வருடத்தில் அகற்றல்கள் | 31-12-2024 நிலவரப்படி | மதிப்பிடவும் | 01-01-2024 நிலவரப்படி செலவு | தேய்மானம் / சேர்க்கைகள் ஆண்டு | வருடத்தில் அகற்றல்கள் | 31-12-2024 நிலவரப்படி | 31-12-2024 அன்று எழுதப்பட்ட மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நிலம்** | 27,159,873.50 | | | 27,159,873.50 | | - | | | - | 27,159,873.50 |
| **கட்டிடம் & பொருத்துதல்கள்** | 220,529,625.95 | 5,310,067.55 | | 225,839,693.50 | 2% | 61,164,108.66 | 4,454,843.08 | | 65,618,951.74 | 160,220,741.76 |
| **வாகனம்** | 31,000,000.00 | 9,200,000.00 | - | 40,200,000.00 | 20% | 10,749,999.00 | 10,290,000.00 | 8,499,999.00 | 12,540,000.00 | 27,660,000.00 |
| **வீட்டுபாண்ட சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்** | 17,939,889.14 | 480,157.50 | | 18,420,046.64 | 10% | 11,074,427.27 | 1,199,608.77 | | 12,274,036.04 | 6,146,010.60 |
| **இயந்திரங்கள்** | 31,672,316.63 | 711,470.00 | | 32,383,786.63 | 15% | 21,765,735.75 | 3,856,853.79 | | 25,622,589.54 | 6,761,197.09 |
| **கணினி** | 8,189,642.90 | 204,140.00 | | 8,393,782.90 | 20% | 5,728,683.63 | 1,060,789.30 | | 6,789,472.93 | 1,604,309.97 |
| **மருத்துவ உபகரணங்கள்** | 308,966,729.14 | 22,839,270.16 | | 331,805,999.30 | 15% | 255,051,967.73 | 17,338,441.72 | | 272,390,409.45 | 59,415,589.85 |
| **திறன்** | - | | | - | 10% | | | | | |
| மொத்தம் | 645,458,077.26 | 38,745,105.21 | - | 684,203,182.47 | | 365,534,922.04 | 38,200,536.66 | 8,499,999.00 | 395,235,459.70 | 288,967,722.77 |
| | | | | - | | | - | | | |
| நன்கொடை | | 19,823,227.55 | | | | | | | | |
| மறுமதிப்பீடு | | 9,200,000.00 | | | | | | | | |
| உண்மையான PPE சேர்த்தல்கள் | | 9,721,877.66 | | | | | | | | |

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ
## கணக்குகளுக்கான குறிப்புகள்

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| **பணம் மற்றும் பணத்திற்குரிய சமமானவை** | 1 | | |
| வங்கியில் பணம் | | 2,221,411.07 | 6,527,058.71 |
| வங்கியில் பணம் - நன்கொடை கணக்கு | | 858,272.01 | - |
| சிறு தொகை | | - | - |
